28.06.19 EVERWIN MATRIC.HR.SEC.SCHOOL

Std: IX STUDY MATERIAL

TAMIL

இயல் - I

தமிழோவியம்

பாடலின் பொருள்:

* காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழ்.
* எந்தக் காலத்திலும் நிலைத்து நிற்பது தமிழ்.
* அகம், புறம் சார்ந்த சங்க இலக்கியங்கள் தமிழில் தோன்றின.
* அவை அமைந்ததற்கான அடிப்படைகளை தமிழ் இலக்கணங்கள் எடுத்துரைத்தன.
* எந்த மொழிக்கும் நிகரில்லாத காப்பியங்கள் தமிழில் உள்ளன.
* மனிதர்களின் வாழ்க்கை இருளைப் போக்க நீதி இலக்கியங்கள் தோன்றின.
* மனிதர்களின் வாழ்வு ஒளிபெற திருக்குறள் ஒன்று மட்டுமே போதும் என்கிறார் தமிழன்பன். மேலும்
* தமிழ் மொழி பல சமயங்களை ஏந்தி வளர்த்தது.
* புதுப்புதுச் சிந்தனைகளை மக்களுக்கு உருவாக்கித் தந்தவர்கள் சித்தர்கள்.
* விரலை மடக்கியவன் வீணையில் இசையில்லை என்பதைப் போல குறைகள் சொல்வதை விட்டு விட்டு புதுக்கோலத்தில் தமிழை வளர்க்க வேண்டும் என்று கூறுகிறார் தமிழன்பன்.